பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டம் கண்டிப்பாக அமுல் நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றேன். இதுவும் சிறுபான்மையினரின் ஏனைய உரிமைகளும் செயற்படுத்தப்படுமானால் சிறுபான்மையினருக்கு பிரச்சினைகள் எழ இடமிருக்காது என்கிறார் நீதி மறுசீரமைப்பு அமைச்சரும் இலங்கை தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் கொழும்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வேட்பாளருமான மிலிந்த மொரகொட.

பொதுத் தேர்தல் தொடர்பாக நவமணிக்களித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். நவமணியின் கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:

13வது அரசியலமைப்புச் சட்டம் அமுல்படுத்தப்படின் சிறுபான்மையினர் பிரச்சினைகளுக்கு இடமிருக்காது



அமைச்சர் மிலிந்த மொரகொட

கேள்வி: உங்களது அரசியல் பிரவேசம் எவ்வாறு ஆரம்பமானது?

பதில்: 2000ம் ஆண்டு ரணில் விக்ரமசிங்கவைப் பிரதமராகக் கொண்டு அமைக்கப்பட்ட ஐ.தே.க. பாராளுமன்றத்தில் தேசிய பட்டியல் உறுப்பினராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து எனது அரசியல் பிரவேசம் அமைந்தது. ஒரு வருடத்தில் பாராளுமன்றம் ஜனாதிபதி சந்திரிக்காவினால் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து 2001 தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க.வில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். 2 1/2 வருடத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து 2004 தேர்தலில் அதே கட்சியில் போட்டியிட்டு மீண்டும் தெரிவாகி எதிரணியில் இருந்தேன். பின்னர் எமது கட்சி சகாக்கள் பலருடன் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்திற்கு கரம் கொடுப்பதற்காக அரசுடன் இணைந்து இன்று வரை அவ்வாறு இருந்து வருகிறேன். எனது பாராளுமன்ற வரலாற்றில் ஆறு வருடம் பூர்த்தயாகும் நிலையில் இந்த தடவைதான் உறுப்புரிமையுடன் இருந்திருக்கிறேன். இந்த 2010 தேர்தலில் ஐ.ம.சு. கூட்டமைப்பில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகிறேன்.

கேள்வி: இந்த தேர்தலின் பின்னர் உங்கள் எதிர்கால வேலைத்திட்டங்களை எவ்வாறு நிர்ணயித்திருக்கிறீர்கள்?

பதில்: மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தையொட்டியே எனது செயற்திட்டங்களையும் முன்னெடுக்கும் வகையில் 12 அம்சத் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறேன். அதை மும்மொழிகளிலும் அச்சிட்டு மக்கள் முன் சமர்ப்பித்து வருகிறேன். எனது எந்த செயற்பாடும் மும்மொழிகளையும் உள்ளடக்கியே அமைத்து வருகிறேன். இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாலே எனது நடவடிக்கைகளும் எப்போதும் உள்ளதென்பதை மக்கள் நன்கறிவர்.

குடிமக்களுக்கு மரியாதை செலுத்தும் ஓர் அரசியல் கலாசாரத்தை மக்கள் மத்தியில் உருவாக்குவதே எனது அடிப்படை திடசங்கற்பமாகும்.

எனது அரசியல் பிரசாரங்களின்போது அப்போதும் இப்போதும் கட்அவுட், சுவரொட்டி, பாரிய பிரசாரக் கூட்டங்கள் என்று வீணான செலவுகளைத் தவிர்த்து வருகிறேன். அவற்றுக்காக செலவாகும் பணத்தைக்கூட கல்வி உட்பட சமூகத்தில் எவ்வளவோ தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் என்பதே எனது கருத்தாகும்.

தலை நகரான கொழும்பிலே எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. கல்வி, வீடில்லாப் பிரச்சினை, சுகாதாரம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். அவற்றுக்கெல்லாம் தீர்வு காணும் வகையிலே முதலாவது கட்டமாக நகர்ப்புற வறிய மக்களுக்காக 48 சமூக நலத்திட்டங்களை முன்னெடுக்க இருக்கிறேன். எனது பிரசுர வெளியீட்டைப் பார்த்தால் இவற்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

கேள்வி: நீங்கள் நீதித்துறை அமைச்சராக இருப்பதால் அத்துறை தொடர்பாக மேற்கொண்ட – மேற்கொண்டு வரும் பணிகள் என்ன?

பதில்: பயங்கரவாதம் ஒழிக்கப் பட்டுள்ளதால், வடக்கு கிழக்கில் பாரிய அபிவிருத்திப் பணிகளின் மத்தியில் நீதித் துறையிலும் விரிவான பணிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. குறிப்பாக யாழ், சிறைச்சாலை மிகவும் சிறிய வீடொன்றாகவே உள்ளது. அதனைப் பரந்த அடிப்படையில் விரிவுபடுத்த எதிர்வரும் ஏப்ரல் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய இருக்கிறேன்.

வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்கள் நிர்மாணிக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கியூடாக 7 மில்லியன் டொலர் பணம் கிடைத்திருக்கிறது. மேலும் பண உதவிகளைப்பெற்று நிறைவான வேலைகள் மேற்கொள்ள இருக்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக அங்கு நீதித்துறை, பொலிஸ் மற்றும் நிருவாகங்களில் பணி புரிவோருக்கு விசேடமாக தமிழ் மொழித் தேர்ச்சி வழங்கும் பணிகளும் நடைமுறைப்படுத்தி வருகிறேன்.

லட்சக் கணக்கான எங்கள் நாட்டவர்கள் தொழில்வாய்ப்புப் பெற்று வெளிநாடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் எங்கள் வளங்கள், அவர்களுக்கு எதிர்கால தேர்தல்களில் அங்கிருந்தே வாக்களிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும்

நேர்காணல் : ஏ.எல்.எம். சத்தார்

திட்டமும் வகுத்திருக்கிறேன். அவர்களது வளங்களையும் நாம் நன்கு திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கேள்வி: நீங்கள் முஸ்லிம்களுக்காக ரோட்மெப் என்ற 12 அம்ச திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறீர்களே இதன் மூலம் தங்களது எதிர்பார்ப்பென்ன?

பதில்: பல்வேறு மொழி, மதம், இனம் சார்ந்த மக்களைக் கொண்ட நாடு இது. இந்த இனம் மதம் அனைத்தும் எமது வளங்கள். இவற்றை வேறுபடுத்தி பணிகளில் பக்க சார்பாக நடக்கும்போதே பிரச்சினைகள் எழுகின்றன. இவற்றின் இன்னல்களையே கடந்த காலங்களில் அனுபவித்தோம். எனவே, முஸ்லிம்களுக்குரிய பிரச்சினைகள் தேவைகளை இனம் கண்டு அவற்றைத் தீர்த்து வைக்கும் முகமாகவேதான் இந்த ரோட்மெப்பை உருவாக்கியிருக்கிறேன். இதனைத் தொடர்ந்து தமிழ் மக்களதும் பிரச்சினை, தேவைகள் குறித்து மற்றொரு ரோட்மெப் தயாரிப்புக்கான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. வெகு விரைவில் அதுவும் வெளிக் கொணரப்படும்.

கேள்வி: தாங்கள் வெளியிட்டுள்ள ரோட்மெப்பில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் பல உள்ளடக்கப்பட்டில்லை என்று சிலர் குறை கூறுகிறார்கள் இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: முஸ்லிம் புத்திஜீவிகள் குழுவொன்றை நியமித்து அவர்கள் சமர்ப்பித்த அறிக்கைக்கு இணங்கவே தயாரிக்கப்பட்டதுதான் இந்த ரோட்மெப். மேற்படி குழுவினரை அணுகி அப்போதே இவரோ, குறை காண்பவரோ தம் பிரச்சினைகளை வெளியிட்டிருக்கலாமே! தொடர்ந்தும் ஒத்துழைப்புக் கொடுத்து இனிவரும் காலங்களில் சேர்த்துக் கொள்ளவும் முடியும். எப்படியும் ஏற்கனவே வெளியிட்டவற்றை அமுல்நடத்துவோம் குறை கூறி இழுபறிபட்டுக் கொண்டிருந்தால் அவையும் செயல் இழந்து விடும்.

கேள்வி: அரசுடன் இணைந்திருக்கும் நீங்கள் ஸ்ரீ.ல.சு. கட்சியை விடுத்து, தேசிய காங்கிரஸ் கட்சியை தனியாக உருவாக்கியதன் நோக்கம் என்ன?

பதில்: தேசிய மட்டத்தில் இன ஒற்றுமையை பிரதிபலிக்கச் செய்யும் நோக்கத்துடனேதான் தேசிய காங்கிரஸ் கட்சியைத் தோற்றுவித்திருக்கிறேன். இது புதிய கட்சியல்ல, இந்நாட்டின் சுதந்திரம் உட்பட நாட்டு நலனுக்காக 1919ல் ஸ்தாபிக்கப்பட்டதே தேசிய காங்கிரஸாகும். அதன் செயற்பாட்டினாலேயே எமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது. அக்கட்சியில் சர் பொன் அருணாசலம் போன்ற தமிழ்த் தலைவர்கள், கலாநிதி ரி.பி. ஜாயா போன்ற முஸ்லிம் தலைவர்கள், பௌத்த தலைவர்கள் என்று அனைவரும் இலங்கையர் என்ற நிலையில் ஒன்றிணைந்து காரியமாற்றினர். அந்த அடிப்படையிலேயே அந்த பலம்பெரும் கட்சியின் 90வது ஆண்டிலேயே 2009.12.09ம் திகதி மீண்டும் புத்துயிர் ஊட்டும் வகையிலேயே தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஐ.ம.சு. கூட்டமைப்புடன் முரண்பட்டில்லாமல் ஏனைய பங்காளிக் கட்சிகளைப்போன்று எமது கட்சியும் ஜனாதிபதியின் கரத்தினைப் பலப்படுத்தும்.

கேள்வி: உங்கள் கூட்டில் ஹெலஉறுமய கட்சியும் அங்கம் வகிப்பதால் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினங்களின் பிரச்சினைகளுக்கு முறையான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாமா?

பதில் : பலதரப்பட்ட கொள்கையுடையவர்களும் ஒரே கூட்டில் இணைந்திருப்பதில் தவறில்லை. அதற்காக சிறுபான்மை இனங்களுக்கு துரோகம் விளையும் என்று எதிர்பார்ப்பது தவறு. அப்படி நிகழாது.

கேள்வி: சிறுபான்மை மக்களுக்கு தாங்கள் கூறும் செய்தி என்ன?

பதில்: பிரிந்திருந்த பூமி ஒன்றுபடுத்தப்பட்டு விட்டது. இனி மக்கள் உள்ளங்களை ஒன்றுபடுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதற்காகவே எனது வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

புதிதாக நாம் எதையும் செய்யத் தேவையில்லை. ஏற்கனவே இருக்கும் அதிகாரம், உரிமைகளைச் செயற்படுத்தினாலே பிரச்சி னைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.

மொழி உரிமை அரசியல் அமைப்பில் உண்டு. அது முறையாக அமுல்படுத்தப்பட்டால் சரி. உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். கொழும்பு நகரில் இரு தமிழ் ஆசிரியர்களின் பிரச்சினைகள் 20 வருடங்களாகத் தீர்க்கப்படாதிருந்திருக்கிறது. விசாரித்துப் பார்த்ததில் அவர்களது தமிழ் மொழியி லான முறைப்பாடு மொழி பெயர்க்கப்படாதிருந்திருக்கிறது. எனவே, அரச கருமமொழி அமுலாக்கம் முறையாக செயற்படுத்தாமையே பிரச்சினைகள் பல உருவாகியிருக்கின்றன.

எனவே, தமிழ் மொழி பேசும் கிராம சேவகர், பொலிஸ், நீதி மற்றும் நிருவாக சேவைகளில் போதியளவு நியமனங்கள் வழங்கப்படவேண்டும். எனது வேலைத்திட்டத்தில் இவை உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

13வது அரசமைப்புச் சட்டம் கண்டிப்பாக அமுல்நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். இவை செயற்படுத்தப்படுமானால் சிறுபான்மையினருக்கு பிரச்சினைகளே எழ இடமிருக்காது.

கேள்வி: தகவல் அறியும் உரிமை என்ற புதிய நடைமுறை ஒன்றை அறிமுகம் செய்ய இருக்கிறீர்கள். அதன் பிரதிபலன் என்ன?

பதில்: மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும். இந்தியாவிலும் இத்தகையதொரு முறை கையாளப்படுகிறது.

குறைகேள் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார். எந்தப் பிரச்சினை, குற்றங்குறைகளானாலும் இவரிடம் முறையிட்டால் உரிய தீர்வு கிடைக்கும். நாட்டில் அனைவருக்கும் சம உரிமை, சம சேவைகள் கிடைக்க இத்திட்டம் வழி வகுக்கும். குறிப்பாக ஏழை, எளிய மக்கள் இதனால் பெரிதும் நன்மை அடைவர்.